# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

அனுப்புநர்
திரு.அ.விஜயன், பி.இ.,
உதவி இயக்குநர்,
மாட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்,
மாநகராட்சி அலுவலகம்,
3-வது தளம், அண்ணா மாளிகை,
மதுரை-625 002.
Website :www.tn.gov.in/dtcp
mail ID : dtcpmadurai@gmail.com

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
ஆலம்பட்டி ஊராட்சி,
திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம்,
மதுரை மாவட்டம்.

ந.க.எண்:- 3081/2020 ம.மா நாள்.17.02.2021.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்- மதுரை மாவட்டம் - திருமங்கலம் வட்டம் - திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் - ஆலம்பட்டி ஊராட்சி, மேலக்கோட்டை கிராமம் - சர்வே எண்கள்.35/5A2A & 35/14 -ல் 1.59 ஏக்கர் (6439.00சமீ) பரப்பளவு இடத்திற்கு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. ஊராட்சி தலைவர், ஆலம்பட்டி ஊராட்சி அவர்களின் கடிதம் நாள்.20.01.2021.
2. மனுதாரர் திரு.S.S.ராஜன் விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் நாள்.16.10.2020.(இணைதள விண்ணப்பம் எண்.7877, நாள்.21.02.2020)
3. இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, மதுரை அவர்களின் கடிதம் எண்-தி.4/13283/2020, நாள்-03.12.2020
4. அரசாணை எண்-18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை. நாள்-31.01.2020
5. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யபட்டமைக்கான தானபத்திர ஆவண எண். 9233/2020 (ம) 9224/2020 நாள்.28.12.2020.
6. மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஆவண எண். 9234/2020, நாள். 28.12.2020.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள். 08.09.2017.
8. அரசாணை எண். 79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.28.09.2017.
10. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2017/பிஏ-2, நாள்.06.11.2019.

11. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள் .03.02.2021(நன்னிலை வரி செலுத்த கோரியது)
12. மனுதாரர் திரு.S.S.ராஜன் கடிதம் நாள். 05.02.2021.( நன்னிலை வரி செலுத்தியது)

*****

**உத்தரவு**

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஆலம்பட்டி ஊராட்சி, மேலக்கோட்டை கிராமம், சர்வே எண்கள் .35/5A2A & 35/14 -ல் 1.59 ஏக்கர் (6439.00சமீ) பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு அனுமதி கோரி பார்வை (1) மற்றும் (2)-ல் சுட்டிய கடிதங்கள் மூலம் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு உத்திரவு வழங்கப்படுகிறது.

ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.அ.(மதுரை மாவட்டம்) எண் .02/2021 என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டு மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் -2 தொகுப்பு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. மனைப்பிரிவில் உள்ளாட்சி உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக உபயோக (TANGEDCO) இடம் பார்வை (5 & 6) -ல் சுட்டிய தானபத்திரங்களின் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை (9)-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனை 17(இ) மற்றும் 17(உ) குறித்து உறுதி செய்து இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
2. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
3. பார்வை (10) -ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Authority" -ன் படி நடவடிக்கை தொடருமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

85

4. பார்வை (9)-ல் சுட்டிய அரசாணையின்படி நகர் ஊரமைப்பு துறையின் முன்அனுமதி பெறப்படும் மேம்பாடுகளுக்கு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017, விதி(3) -ன்படி உள்ளாட்சிக்கான கூராய்வு கட்டணமாக ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) மற்றும் விதி(9)-ன்படி நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அதனை வசூலித்து கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட்ட பின்னரே மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கணக்கு தலைப்பு

0217-Urban Development

60 - other urban Development Schemes

80 - other Receipts

AS -Receipts under Landuse Conversion charges

27 Non Taxation fees - 09 collections

(DPC-0217-60-800-AS-2790)

பார்வை (9) ல் கண்ட கடிதம் மூலம் மனுதாரரிடமிருந்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் மற்றும் கூராய்வு கட்டணம் முழுமையாக பெறப்பட்டுள்ளது. இத்துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.17(ஈ)ன்படி அக்கடித நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு, தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு ஊராட்சி தலைவர், ஆலம்பட்டி ஊராட்சி கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், மனுதாரர் மேற்கொண்டு உத்தரவு பெற ஊராட்சி தலைவர், ஆலம்பட்டி ஊராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

17/2/21

**இணைப்பு**

வரைபடம் மற்றும்
நிபந்தனைகள் - 2 நகல்கள்.

நகல்

1. திரு.S.S.ராஜன்,
த/பெ M.S.சீனிவாசன்,
கதவு எண்- 160, மதுரை சாலை,
திருமங்கலம்,
மதுரை மாவட்டம் - 625 706.
} கடித நகல் மட்டும்

2. தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம்,
(TNRERA)
1A, முதல் தளம், காந்தி இர்வின் பிரிட்ஜ் சாலை,
எழும்பூர், சென்னை -600008.

3. தொழில்நுட்ப வைப்பறை - 1

87

திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் **ஆலம்பட்டி கிராம** ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : **திரு.பா.முருகேசன்.,**

ந.க.எண்: 01/2020-21 நாள்:18.03.2021.

பொருள்: புதிய மனைப்பிரிவு அமைத்தது - ஆலம்பட்டி கிராம ஊராட்சி (மேலக்கோட்டை வருவாய் கிராமம் சர்வே எண்கள்:35/5A2A & 35/14-ல்,1.59 ஏக்கர் (6439.00 ச.மீ) பரப்பளவு இடத்திற்கு ஊராட்சியின் உத்தேச அனுமதி வழங்குதல் - குறித்தது.

பார்வை:
1.மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ந.க.எண்:3081/2020.ம.மா.நாள்:17.02.2021.
2. அரசாணை (நிலை) எண்:255 ஊரக வளர்ச்சித் துறை, நாள்:18.08.1997.
3. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சி பொது உபயோகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கு தானபத்திர ஆவண எண்:9233/2020 & 9224/2020 & 9234/2020 - நாள் :28.12.2020.
4. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் , ந.க.எண்:13686/2017/எல்ஏ1 - நாள்:08.09.2017.
5.அரசாளை எண் :79,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சி துறை நாள்:04.05.2017.
6.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:12201/2017/சிபி,நாள்:28.09.2017.
7.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:4367/2017/பி.ஏ-2,நாள்:06.01.2019.
8.மனுதாரர் திரு.S.S.ராஜன் விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் ,நாள்:16.10.2020 - (இணையதள விண்ணப்பம் எண்:7878 , நாள்:21.02.2020).
9.ஆலம்பட்டி ஊராட்சி தலைவர் அவர்கள் ஸ்தல ஆய்வு நாள்:10.03.2021.
10.சந்தை மதிப்பீட்டில் 3% அரசு தலைப்பில் செலுத்தியது(DPC – 0217-60-800-A5-2790)-ல் ரூ.1,55,850/- நாள்:17.03.2021.
11.திட்டமில்லா பகுதி நிலமாற்றத்திற்கான கட்டணம் DDயாக ரூ.1000 /- செலுத்தியது (DD எண்:823960/- நாள்:17.03.2021)
12.மனைபிரிவு அனுமதி கட்டணம் DDயாக ரூ.1600/- செலுத்தியது DD எண்:823961 ,நாள்:17.03.2021 அரசாணை எண்:255 - நாள்:18.08.1997.
13.ஊராட்சி ஆய்வுக் கட்டணமாக ரூ.3000/- DDயாக செலுத்தியது DD.எண்: 823962,நாள்:17.03.2021.
14.ஆலம்பட்டி கிராம ஊராட்சி மன்ற தீர்மான எண்: 37/2020-21,நாள்: 25.02.2021.

*****

உத்தரவு :

மதுரை மாவட்டம்,திருமங்கலம் வட்டம்,திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் ஆலம்பட்டி கிராம ஊராட்சியில் (மேலக்கோட்டை வருவாய் கிராமம் 35/5A2A & 35/14- ல்,1.59 ஏக்கர் (6439.00 ச.மீ) பரப்பு கொண்ட இடத்தில் புதிய மனைப்பிரிவு அமைக்க பார்வை(1)ல் சுட்டிக் காட்டப்பட்ட கடிதத்தின் வாயிலாக உதவி இயக்குனர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ,மதுரை ,அவர்களிடமிருந்து தொழில் நுட்ப அனுமதி எண்:2/2021 - நாள்:17.02.2021 என அனுமதி வரப்பெற்றுள்ளது.

பார்வை(10)ல் சுட்டிக்காட்டுள்ளபடி 3% சந்தை மதிப்பீட்டில் அரசு தலைப்பில் ரூ.1,55,850/- செலுத்தப்பட்டுள்ளது. DPC – 0217-60-800-AW-2790 நாள்:17.03.2021.

பார்வை(11,12 மற்றும் 13) - ல் சுட்டிக் காட்டியுள்ளபடி கட்டணங்கள் ஊராட்சிக்கு வங்கி வரைவோலையாக (DD எண்:823961,ரூ.1600/-,நாள்:17.03.2021), (DD எண்:823960,ரூ.1000/- ,நாள்:17.03.2021), (DD எண்:823962,ரூ.3000/-,நாள்:17.03.2021) வரப்பெற்றுள்ளளது.மேலும் பார்வை(3)ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சி பொது உபயோகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கு தானபத்திர ஆவண எண்:9233/2020 & 9224/2020 & 9234/2020 - நாள் :28.12.2020.ஊராட்சிக்கு வரப்பெற்றுள்ளது.மேலும் ,இந்த மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. அரசாணைகளுக்கு உட்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையில் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் வழிமுறைகளுக்கு கட்டுப்பட்டு இந்த உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.
2. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நிலஉரிமையை உறுதிப்படுத்தவில்லை,கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின்படி மனைபிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது.சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் மூலம் தீர்க்கப்படலாம் ,நில உரிமை குறித்து முடிவு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
3. மனைப்பிரிவின் மனை அளவுகள்,புல எண்கள் மற்றும் உத்தேச சாலைகள் அமைப்புகள் ஆகியவற்றை தலைவர் /செயல் அலுவலர் ஆய்வின் போது காட்டப்பட்டதில் மாற்றம் ஏதும் இருப்பின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994- ன் படி தங்கள் மீது உரிய சட்ட ரீதியான நடவடிக்கை செய்யப்படும்.
4. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும்,நிலமானது தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் மற்றும் நில சீர்திருத்தசட்ட நகளின் கீழ் கவரப்படவில்லை என தங்களால் உறுதி மொழி சான்று வழங்கப்படவேண்டும்.
5. கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மனையின் பரப்பளவு கணக்கிடப்பட்டுள்ளது,கூடுதல் பரப்பளவு இருப்பது பின்னர் தெரியவந்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் படி தங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.
6. பெறப்பட்ட ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்ட வரைபடத்திற்கு உள்ளாட்சி விதிகளின்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.
7. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன் பாட்டிற்கு மாறாகவும் கூடுதலாகவும்,மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டது.கண்டறியப்பட்டால் திட்ட அனுமதி இரத்து செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் உரிய சட்ட ரீதியான நடவடிக்கை தங்கள் மீது எடுக்கப்படும்.
8. காலிமனைபிரிவு சாலைகள் ஓரங்களில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

9. விற்பனைக்குன்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கபடவேண்டும்.
10. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் சரியானதல்ல என அறிவிக்கப்பட்டால், அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் ரத்து செய்யப்படும்.
11. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைபிரிவு நுழைவாயிலில் 6*4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்படவேண்டும்.
12. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ,மதுரை ந.க.எண்:3081/2020 நாள்:17.02.2021 - ல் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மனுதாரர் தவறாது கடைபிடிக்க வேண்டும்,தவறும் பட்சத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஆலம்பட்டி ஊராட்சி
மதுரை மாவட்டம்
நாள்: 18.03.2021
திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

தலைவர்
ஆலம்பட்டி கிராம ஊராட்சி
திருமங்கலம் ஒன்றியம்

இணைப்பு: 1.மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலரின் செயல்முறை நடவடிக்கைகள் நகல்
2. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் - 1
3. மனைப்பிரிவு நிபந்தனைகள் - 1

பெறுநர்:

திரு.S.S.ராஜன் ,
160,மதுரை மெயின் ரோடு,
திருமங்கலம் வட்டம்,
மதுரை மாவட்டம்.

நகல்:

1.ஊராட்சி மன்ற தலைவர், ஆலம்பட்டி ஊராட்சி.
2.ஊராட்சி செயலர், ஆலம்பட்டி ஊராட்சி.
3.உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,மதுரை.
4.சார்பதிவாளர் அலுவலகம்,திருமங்கலம்.